YAMAHA AGENCY
யமஹா அவுட்போட் மோட்டர் மீண்டும் 10-8-87 முதல் பருத்தித்துறை பிரதான வீதியில் இயங்கத்தொடங்கியுள்ளது.
ஜோசப் மோட்டர் வேக்ஸ்
யமஹா ஏஜென்சி
பிரதான வீதி,
பருத்தித்துறை.

Registered as a Newspaper

# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

விலை ரூ. 1-50

யமஹா ஏஜென்சி
உங்களுக்குத் தேவையான சகலவிதமான யமஹா உதிரிப்பாகங்களைப் பெற்றுக்கொள்ளவும், இயந்திரங்களைப் பழுது பார்ப்பதற்கும், கிருங், பிற்றிங் செய்து கொள்வதற்கும் நாடவேண்டிய ஸ்தாபனம்.
ஜோசப் மோட்டர் வேக்ஸ்
பிரதான வீதி,
பருத்தித்துறை.

சுடர்: 2 யாழ்ப்பாணம் பிரபவ ஆவணி மீ 04 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1409 ஜுல்ஹஜ் பிறை 24 (20 – 08 – 1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 228

# பலாலியில் இருந்து விமான சேவைகள்

## கொழும்பு -- சென்னை விமானம் தரித்துச் செல்ல ஏற்பாடுகள்

— அலுவலகச் செய்தியாளர்: சண். ஜோண்சன் —

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 20

பலாலியில் இருந்து சென்னைக்கும், கொழும்புக்கும் விரைவில் விமான சேவைகள் ஆரம்பிக்கப்படும் என மிக நம்பிக்கையாக அறிய வந்துள்ளது.

முதல் ஏற்பாடாக கொழும்புக்கும் சென்னைக்கும் இடையில் சேவையில் ஈடுபடும் எயர் இந்தியா விமானங்கள் பலாலியில் தரித்துச் செல்ல உள்ளன.

கொழும்பில் இருந்து சென்னைக்கும் சென்னையில் இருந்து கொழும்புக்கும் செல்லும் பயணிகள் விமானங்கள் பலாலி விமான நிலையத்தில் தரித்துச் செல்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதற்காக பலாலி விமான நிலையத்தில் சுங்கத் திணைக்கள அலுவலகம் ஒன்றும் திறக்கப்படும்.

இது சம்பந்தமாக இந்திய அதிகாரிகளுடன் ஆராய்வதற்காக நாளை வெள்ளிக்கிழமை சுங்க அதிகாரி ஒருவர் பலாலி செல்வார்.

பலாலியில் தரித்துச் செல்லும் விமானங்களில் பயணிகள் பிரயாணம் செய்ய வகை செய்யப்படும். (அ–7)

## கோட்டைக்குள் விடப்பட்ட வாரகனங்களின் நிலை குறித்து அதிர்ச்சி!

யாழ்ப்பாணம், ஆக. 20

கோட்டையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அரச திணைக்கள வாகனங்களைப் பார்க்கச் சென்ற திணைக்கள அதிகாரிகள் அந்த வாகனங்களின் நிலை கண்டு அதிர்ச்சி அடைந்தனர்.

கடந்த 83ஆம், 84ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட நிலைகாரணமாக இந்த வாகனங்கள் பாதுகாப்புக் கருதி கோட்டையினுள் நிறுத்தப்பட்டன.

இப்பொழுது நிலைமை சீரடைந்துள்ளதால் இந்த வாகனங்களை மீண்டும் எடுக்கும் நோக்கத்துடன் அதிகாரிகள் கோட்டையினுள் சென்றனர்.

அங்கே பெரும்பாலான வாகனங்களின் வெறும் தகரங்களே இருந்தன.

யாழ் செயலகத்துக்குச் சொந்தமான இருவாகனங்கள் மட்டும் திருத்தி அமைத்து பாவிக்கக்கூடிய நிலையில் உள்ளனவாம்.

## தச்சன்குளத்தில் ராணுவப் பயிற்சி

வவுனியா, ஆக. 20

கண்டி வீதி தச்சன் குளத்தில் அமைந்துள்ள வன்னி ஆயுதப்படைகளின் தலைமை அலுவலகத்தில் இராணுவத்தினருக்கான பயிற்சி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை தொடக்கம் இராணுவத்தினர் பயிற்சியில்ஈடுபட்டதற்கு அறிகுறியாக தொடர்ச்சியான வேட்டுச் சத்தங்கள் கேட்டன.

இம்முகாமைச் சுற்றியுள்ள கிராமவாசிகள் வெடிச் சத்தங்களைக் கேட்டு முதலில் அதிர்ச்சியடைந்தார்கள். எனினும்பின்னர் நிலைமையை அறிந்து ஆறுதலடைந்தார்கள்.

இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் பின்னர், இவ்வாறு இராணுவத்தினருக்குப் பயிற்சியளிக்கத் தொடங்கியுள்ளமை பலரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது. (உ–164)

## இலங்கை -- இந்திய அதிகாரிகள் மட்ட பேச்சு ஆரம்பம்

கொழும்பு, ஆக. 20

இந்திய—இலங்கை ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படாதஎஞ்சிய விஷயங்கள் பற்றிய பேச்சுக்கள் நேற்றுக்காலை கொழும்பில் ஆரம்பமாகின.

இந்திய அரசு அதிகாரிகள் குழுவுக்கு கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் ஜே. என். டிக்ஸிற் தலைமை வகிக்கின்றார்.

இப்பேச்சுக்களில் உதவுவதற்கு தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களானதிரு.எம். சிவசிதம்பரம்,இரா.சம்பந்தன் ஆகியோர் கொழும்பில் தங்கிநிற்கின்றனர்.

மாகாணசபைகளுக்கான அதிகாரங்கள், இடைக்கால நிர்வாக அமைப்பு ஆகியன பற்றி இப்பேச்சுக்கள் நடைபெறுகின்றன. (உ–எ)

## தொலைத் தொடர்பு சீரமைப்பு வேலைகள் இம்மாத இறுதியில்

யாழ்ப்பாணம், ஆக 20

இந்த மாத இறுதிக்குள் யாழ்ப்பாண தொலைத் தொடர்புகளை சீரமைப்பதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதன் முதற்கட்டமாக யாழ்ப்பாண பிரதம தொலைத் தொடர்பு பொறியியலாளர் திரு. ரி. அம்பிகைராஜா அவசர அழைப்பின் பேரில் நேற்று கொழும்பு பயணமானார்.

ஒரு வார காலத்திற்குள் தொலைத் தொடர்பு நிலையப் பகுதியில் உள்ள கண்ணி வெடிகளை இந்திய அமைதிப்படை அகற்றும்.

அதன் பின்னர் தொலைத் தொடர்பு நிலையத்தைப் பார்வையிட கொழும்பில் இருந்து உயர் அதிகாரிகள் யாழ்ப்பாணம் வரலாம் என நம்பப்படுகிறது.

## இலங்கை வங்கியில் மீண்டும் பணப் புழக்கம்

யாழ்ப்பாணம், ஆக. 20

வடக்கில் இலங்கை வங்கி தனது கிளைகள் மூலம் விரைவில் பணப் புழக்கத்தை ஆரம்பிக்க உள்ளதாகத் தெரியவருகிறது.

இதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கொழும்பில் இருந்து பணம் கொண்டுவரப்பட்டு கோட்டை இராணுவ முகாமில்பாதுகாப்

(4ஆம் பக்கம் பார்க்க)

## மலையக இளைஞர் விடுதலையாவர்

வவுனியா, ஆக. 20

பயங்கரவாதத் தடைச். சட்டத்தின்கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள 150க்கும் மேற்பட்ட மலையக இளைஞர்கள் சமாதான ஒப்பந்தத்திற்கமைய விரைவில் விடுதலை செய்யப்படுவார்கள் என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. எம். எஸ் செல்லச்சாமி தெரிவித்துள்ளார். (உ–164)

## மினிபஸ் கட்டணம் சீராகிறது

கொக்குவில், ஆக. 20

இம்மாதம் பதினெட்டாம் திகதி முதல் சகல போக்குவரத்துப் பாதைகளிலும் அறவிடப்படும் சட்டணம் இலங்கை போக்குவரத்துச் சபை அறவிடும் கட்டணத்தை ஒத்ததாகவே இருக்கும் என வட பிராந்திய மினிபஸ் சேவைச் சங்கம் அறிவித்துள்ளது.

சில வழிப் பாதைகளில் ஐம்பது சதமளவில் கட்டண வேறுபாடு இருக்கக் கூடுமெனவும் தெரிவிக்கப்படுகிறது. (இ–69)

### சுபநேரம்

20-8-1987
வியாழக்கிழமை
சுபநேரம்:
7.35 முதல் 9.05வரை
ராகுகாலம்:–
1 35 முதல் –3.05 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.
ஏகாதசி விரதம்

## பொறிவெடிகள் அகற்றப்படுகின்றன

யாழ்ப்பாணம், ஆக. 20

காங்கேசன்துறையில் பொறிவெடிகள், கண்ணி வெடிகள் ஆகியவற்றை அகற்றும் வேலையை இந்திய அமைதிப் படை நேற்று ஆரம்பித்தது.

காங்கேசன்துறைப் பகுதியில் உள்ள சகல இடங்களிலும் இந்த கண்ணி வெடி, பொறி வெடிகளை அகற்றும் வேலை நடைபெறும். (உ–7)

ஒப்பந்த அமுலில் இக்கல் ஏற்பட்டால்

# மாற்று நடவடிக்கை இந்தியாவிடம் உண்டு

## ராஜ்ய சபையில் நட்வர்சிங்

புதுடில்லி, ஆக. 20

இந்திய—இலங்கை ஒப்பந்தம் முழுமையாக அமுல்நடத்தப்பட்டபின்னரே இந்திய அமைதிப் படை இலங்கையில் இருந்து திருப்பி அழைக்கப்படும்.

இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை அமுல்நடத்துவதில் சிக்கல் ஏற்பட்டால் அதற்கு பதிலான மாற்று நடவடிக்கை இந்தியாவிடம் உண்டு.

—இவ்வாறு இணை அமைச்சர் நட்வர் சிங் நேற்று ராஜ்ய சபையில் தெரிவித்தார்.

இந்திய—இலங்கை ஒப்பந்தம் பற்றிய விவாதத்திற்குப் பதிலளித்துப் பேசுகையில் இணை அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் சொன்னதாவது;

தமிழ்ப் போராளி அமைப்புக்களை கலந்தாலோசிக்காமல் செய்யப்பட்ட ஒப்பந்தம் இது என்று தி.மு.க. எம். பி. திரு. கோபால சுவாமி சொல்வது தவறு. உண்மையில் இக்கருத்து சரி

(4ஆம் பக்கம் பார்க்க)

## பூநகரிச் சம்பவம்; இந்திய இராணுவம் மீண்டும் விசாரணை

யாழ்ப்பாணம், ஆக. 20

பூநகரியில் ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் ஈரோஸ் போராளிகள் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் குறித்து இந்திய இராணுவ அதிகாரிகள் தமது

(4 ஆம் பக்கம் பார்க்க)

## நினைவு திரும்பியது!

கொழும்பு, ஆக. 20

அமைச்சர் லலித் அத்துலத் முதலிக்கு நேற்று நினைவு திரும்பியது.

கடந்த செவ்வாய் நடந்த கிரனேட் தாக்குதலில் அமைச்சருக்குக் கழுத்திலும் வயிற்றிலும் பாரதூரமான காயங்கள் ஏற்பட்டன.

அதைத்தொடர்ந்து அமைச்சர் மயக்க நிலையில் ஸ்ரீஜெயவர்த்தனபுர ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

ஜனாதிபதி அவரைப் பார்க்க உடனே ஆஸ்பத்திரிக்கு விரைந்தார்.

அப்போது அமைச்சர் அவசர சத்திரசிகிச்சைக்காக தியேட்டருக்குள் எடுத்துச் செல்லப்பட்டிருந்தார்.

அமைச்சருக்கு இரண்டாவது சத்திரசிகிச்சையும் மேற்கொள்ளப்

(4ஆம் பக்கம் பார்க்க)

### வாசகர் கவனத்துக்கு

இன்று (20-8-87) வியாழக்கிழமை தொடக்கம், உதயன் நாளிதழின் விலை ஒரு ரூபா ஐம்பது சதமாக உயர்த்தப்பட்டுள்ளது என்பதை வாசகர்களுக்கு அன்புடன் அறியத்தருகிறோம்.

பக்கங்களை அதிகரித்து பல மடங்கு செய்திகளையும், புதிய சுவையான அம்சங்களையும், தருவதற்காகவே இந்தச் சிறிய விலை உயர்வைச் செய்ய வேண்டியதாயிற்று.

எதிர்வரும் ஞாயிறு (23-8-87) முதல் உதயன் அதிக பக்கங்களுடன், புதுப்பொலிவுடன், உங்கள் கைகளில் தவழ்வான்.

ஆகையால் இந்த விலை உயர்வை வாசகர்கள் பொருட்படுத்த மாட்டார்கள் என்றே நம்புகிறோம்.

இன்று தொடக்கம் ஒரு ரூபா ஐம்பது சதத்தை மட்டுமே கொடுத்து உதயனை வாங்குங்கள்.

—நிர்வாகிகள்

## அமைச்சருக்கு மாரடைப்பு

கொழும்பு, ஆக. 20

கிரனேட் தாக்குதலில் காயமடைந்த அமைச்சர் மேஜர் மொன்டேகு ஜெயவிக்ரமவுக்கு பின்னர் மாரடைப்பு ஏற்பட்டது.

அவர் இப்போது காயங்களுக்கும் மாரடைப்புக்கும் சிகிச்சை பெற்று வருகின்றார். (உ–எ)

### முச்சந்தி முரளி



சடற்பிரதேசத்திலை கூட்டு ரோந்து நடக்கப் போகுதெல்லே, அதாலை வானத்தாலை பறக்க விடுகிறது பிரச்சினை இல்லை எண்டு யோசிச்சிட்டினம் போலை..... !

## நேற்றும் ஆயுத ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், ஆக. 20

தமிழீழ விடுதலைப் புலிகள் நேற்று தமது ஆயுதங்களின் இறுதிப்பகுதியை திருகோணமலையில் ஒப்படைத்தனர்.

திருகோணமலை நகரசபை மண்டபத்தில் வைத்து இந்த ஆயுதங்கள் ஒப்படைக்கப்பட்டன. (உ–7)

## கூட்டணி கண்டனம்

சென்னை, ஆக 20

ஜனாதிபதி ஜெயவர்த்தன மற்றும் அரசு எம்.

(4ஆம் பக்கம் பார்க்க)

ஜனாதிபதி கொலை முயற்சியால்

## ஒப்பந்த அமுல் வாய்ப்புக் குறைகிறது

### லண்டன் நாளிதழ் கருத்து

லண்டன், ஆக 20

ஜனாதிபதி மீது மேற்கொள்ளப்பட்ட கொலை முயற்சிச் சம்பவம் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை அமுல் நடத்தும் வாய்ப்பைக் குறைத்துள்ளது.

லண்டன் இன்டிபென்டென் நாளிதழ் இப்படி கருத்து வெளியிட்டிருக்கின்றது.

ஒப்பந்தத்துக்கு சிங்கள மக்கள் மத்தியில் தோன்றியுள்ள எதிர்ப்பு ஐ.தே.க. அரசாங்கத்தை 1989 தேர்தலில் தோற்கடிப்பதற்கு முன்னர் அரசு எம். பிக்களை

(4ஆம் பக்கம் பார்க்க)

## தாக்குதல் தொடரும் என எச்சரிக்கை!

கொழும்பு, ஆக. 20

இந்திய-இலங்கை ஒப்பந்தம் கைவிடப்படும் வரை இது போன்ற தாக்குதல்கள் தொடரும் என்று எச்சரிக்கப் பட்டு உள்ளது.

தாய்நாட்டைக் காக்கும் இயக்கத்தைச் சேர்ந்ததாகக் கூறப்படும் ஒருவர் கொழும்பில் உள்ள வெளிநாட்டுச் செய்தியாளர் ஒருவருக்குத் தொலைபேசியின் மூலம்தொடர்புகொண்டு இதனைத் தெரிவித்தார்.

–இப்படி பி. பி. சி. நேற்றுக் காலை அறிவித்தது.

கடந்த செவ்வாய்க் கிழமை காலை நாடாளுமன்றக்கட்டடத்தில் ஜனாதிபதி மீதுநடத்தப்பட்ட கிரனேட் தாக்குதல் சம்பவத்துக்கு தாய்நாட்டைக்காக்கும் இயக்கமே உரிமை கோரியது தெரிந்ததே. (உ–எ)

## நாடாளுமன்ற ஊழியர் தீவிர விசாரணையில்

கொழும்பு, ஆக. 20

கோட்டே நாடாளுமன்றக் கட்டடத்தில் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற குண்டு வெடிப்பு; துப்பாக்கிப் பிரயோக சம்பவம் தொடர்பாக நாடாளுமன்ற ஊழியர் ஒருவர் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றார்.

இச்சம்பவத்தின் பின்னர் இராணுவத்தின் குண்டு வெடிக்கவைக்கும் பிரிவினர்நாடாளுமன்றக் கட்டடத்தைத் துருவித் துருவிச் சோதனையிட்டனர்.

பின்னர்நாடாளுமன்ற ஊழியர்களை விசாரித்தனர்.

இறுதியில் ஊழியர் ஒருவர் கைதுசெய்யப்பட்டார்.

அவர் தற்சமயம் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றார்.

கூட்டம் நடந்த குழு அறையின் திறப்புக்கள் இந்தஊழியரின் பொறுப்பிலேயே இருந்தனவாம்.

அத்திறப்புக்கள் வெளியார் கைகளுக்கு எப்

(4ஆம் பக்கம் பார்க்க)

## இரத்தம் பீறிட லலித் மயங்கிச் சரிந்தார்

### தொண்டமான் தகவல்

கொழும்பு, ஆக. 20

குண்டுகள் வெடித்ததைத் தொடர்ந்து அமைச்சர் லலித் அத்துலத் முதலி, மொண்டேகு ஜெயவிக்ரம ஆகியவர்கள் இரத்தம் பீறிட மயங்கிக் கிடந்தனர்.

—இப்படி அமைச்சர் தொண்டமான் சொன்னார்.

தாமதமாகக் கூட்டத்துக்குச் சென்றபடியால் நான் பின்வரிசை ஆசனம் ஒன்றில் அமர்ந்து இருந்தேன்.

ஜனாதிபதிக்கு நேர் எதிரில் இருந்த அறையில் இருந்தே கிரனேட் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

—இப்படி அமைச்சர் தொண்டமான் மேலும் தெரிவித்தார். (உ–எ)

**இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ் நகரிலும் பெற்றோல் ரூ. 13-50

யாழ்ப்பாணம், ஆக. 20

யாழ்நகரில் தற்போது பெற்றோல் லீற்றர் ரூபா 13-50க்கு விற்பனை செய்யப்படுகிறது.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய இடங்களில் லீற்றர் 13-50க்கு பெற்றோல் விற்கப்பட்ட போதிலும் யாழ் நகரில் லீற்றர் 16-50க்கே விற்கப்பட்டது.

எனினும் தற்போது யாழ் நகரிலும் விலை குறைப்புச் செய்யப்பட்டுள்ளது.

(இ-10)

## பொறி வெடி: இருவர் காயம்

யாழ்ப்பாணம் ஆக 20

செவ்வாயன்று பொறி வெடியில்சிக்கிஒர்இளைஞனும் ஒரு சிறுவனும் பலத்த காயமடைந்தனர்.

ஏ. ஸ்ரீகுமார் வயது17 ஏழாலை எம். சிவரூபன் (வயது7) குரும்பசிட்டி ஆகியோரேகாயம்அடைந்தவர்கள் ஆவர். (இ-7)

# ஆயுதங்களுடன் வரும் ஸ்ரீலங்கா சிப்பாய்கள்

## பூநகரியில் மக்கள் பீதி

பூநகரி, ஆக: 20

பூநகரி, வாடியடிக்கு தினமும் ஆயுதங்கள் சகிதம் வரும் ஸ்ரீலங்கா இராணுவத்தினரைக் கண்டு பொதுமக்கள் பெரிதும் அஞ்சவேண்டியுள்ளது.

அங்கு என்னநேரத்தில் என்ன நடக்குமோ என்று தெரியாது பஸ் பயணிகள், சந்தைக்கு வரும் மக்கள் பதற்றம் அடைகின்றனர்.

பூநகரி 4ஆம் கட்டை இராணுவ முகாமில் இருந்தே ஆயுதம் தாங்கிய ஸ்ரீலங்கா இராணுவத்தினர் தினமும் வாடியடிக்கு வந்து செல்கின்றனர்.

வாடியடி ஸ்ரீ லங்கா இராணுவ முகாம் சில வாரங்களுக்குமுன் தாக்கப்பட்டதற்காக வாடியடிவரும் இராணுவத்தினர் தங்கள்மீது பழி தீர்க்கலாம்எனப் பொது மக்கள் அஞ்சுகின்றனர்.

4ஆம்கட்டைஸ்ரீலங்கா இராணுவ முகாமின் அருகே இந்திய இராணுவ முகாமும் உள்ளது குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீலங்கா இராணுவத்தினர் ஆயுதபாணிகளாக வாடியடியால் நடமாடுவதைப் பூநகரி பிரசைகள்குழுத் தலைவர் இந்திய இராணுவ அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளார்.

(இ-7)

## கோழிக் குஞ்சு விநியோகம்

யாழ்ப்பாணம், ஆக. 20

25ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவில் யாழ். அரசாங்க கால்நடை வைத்திய அலுவலகத்தில் ஒரு நாள் கோழிக் குஞ்சுகள் விநியோகம் செய்யப்படும்.

மேலதிக விவரங்களுக்கு இத்தினத்துக்கு முன்பாக கால்நடை வைத்தியப் பகுதி உத்தியோகத்தரைச் சந்திக்கும்படி கோரப்படுகிறது. (இ)

## ஜெகோவா சாட்சிகள் மாநாடு

யாழ்ப்பாணம், ஆக. 20

ஜெகோவாவின்சாட்சிகளின் மூன்று நாள் மாவட்ட மாநாடு சாவகச்சேரி பேரம்பலம் வீதியில் உள்ள ராஜ்ஜிய மன்றத்தில் நாளை வெள்ளி காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகும்.

சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் மாநாடு தொடர்ந்து நடைபெறும்.

வேதாகமத்தை அடிப்படையாகக் கொண்ட இரு நாடகங்கள் திரு. எஸ். தியோப்பிலஸ் அவர்களின் பகிரங்கச் சொற்பொழிவு ஆகியவையும் இடம்பெற உள்ளன. (இ)

யாழ்தேவியில்

## தமிழ்ப் பயணிகளிடம் நகை, பணம் கொள்ளை

கொழும்பு, ஆக 20

யாழ்தேவி ரயிலில் கொழும்பு நோக்கிப் பயணம் செய்த தமிழ்ப் பயணிகளிடம் இருந்து நகைகள், பணம், முதலியன காற்சட்டைஅணிந்த கோஷ்டி ஒன்றினால் கொள்ளைஇடப்பட்டன.

கடந்த ஞாயிற்றுக் கிழமை குருநாகலுக்கும் பொல்காவலைக்கும் இடையில் யாழ்தேவி சென்று கொண்டிருந்த சமயம் இச்சம்பவம் இடம்பெற்றது.

திடீரென்று பயணிகள் பெட்டிக்குள் நுழைந்த கோஷ்டி கத்திகளைக் காட்டிப் பயமுறுத்திக் கொள்ளை இட்டது.

ஐந்து பெண்களிடம் இருந்து தாலிக்கொடிகள், நான்கு பெண்களிடமிருந்து சங்கிலிகள் மற்றும் கைக்கடிகாரம், பணம்ஆகியன கொள்ளை இடப்பட்டன.

அபாயச் சங்கிலியை இழுத்து ரயிலை நிறுத்திய பின்னர் கொள்ளைக் கோஷ்டி தப்பிச் சென்றது.

பொல்காவலை ரயில் நிலைய அதிபரிடம் விஷயம் தெரிவிக்கப்பட்டது.

(இ எ)

## காங்கேசனுக்கு ரயில்

கொழும்பு, ஆக. 20

காங்கேசன் துறை வரையான யாழ்தேவி ரயில் சேவை இம்மாத முடிவில் மீண்டும் ஆரம்பமாகலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

பெரும்பாலும் இம்மாமாதம் 28ஆம் திகதி காங்கேசன் துறையில் இருந்து யாழ்தேவி சேவை நடைபெறத் தொடங்கும் என்று தெரியவருகின்றது.

கொடிகாமத்தில் இருந்து காங்கேசன் துறை வரையான ரயில் பாதை சிர்திருத்த வேலைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

5 பீரங்கித் தாங்கிகள் சகிதம்

# மட்டக்களப்பில் 2 முகாம்களில் 300 இந்தியத் துருப்புக்கள்

## புலிகளின் பிராந்தியத் தலைவருடன் வானொலித் தொடர்பு

மட்டக்களப்பு, ஆக.20

மட்டக்களப்பு மாவட்டத்தில் இரு இடங்களில் இந்திய துருப்புகள் முகாமிட்டுள்ளன.

புதூர் பாடசாலை, மன்ரேஷா ஆகிய இடங்களில் அமைந்துள்ள இம் முகாம்களில் 300 துருப்புகள் கடமையாற்றுகின்றன. இத்துருப்புக்களுக்கு கேர்ணல் கண்ணு இணைப்பு அதிகாரியாகக் கடமையாற்றுகின்றார்.

இந்த இரு இடங்களிலும் முகாமிட்டுள்ள துருப்புகள் அங்கு வசதியான கட்டடங்கள் உள்ள போதிலும் கூடாரமிட்டுத் தான் தங்கியுள்ளன.

இந்தியத் துருப்புக்களை பிரசைகள் குழு, அரச உயரதிகாரிகள், தமிழீழ விடுதலைப் புலிகள், ஈரோஸ் பிரமுகர்கள் ஆகியோர் சந்தித்து உரையாடினார்கள்.

இந்தியத் துருப்புகளின் பாவனைக்காக ஐந்து பீரங்கித் தாங்கிகள் திருமலை துறைமுகத்திலிருந்து ஹபறனை வழியாக மட்டக்களப்புக்கு எடுத்து வரப்பட்டன.

இந்த தாங்கிகளில் இரண்டு நீரிலும் நிலத்திலும் செல்லக் கூடியவை என்று இந்திய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இது இவ்வாறிருக்க கோர்ணல் கண்ணுவுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் மட்டக்களப்பு- அம்பாறை பிராந்திய அமைப்பாளர் இ. பிரான்சிஸுக்குமிடையில் வானொலித் தொடர்பு வசதிகள் செய்யப்பட்டுள்ளன. (இ-21)

## சின்னக்கடைப் பகுதியில் களவு

குருநகர். ஆக. 20

யாழ் சின்னக்கடைப் பகுதி வீடு ஒன்றின் விருந்தையில் விடப்பட்டிருந்த சைக்கிள் ஒன்றும், மரத் தளபாடங்களும் களவாடப்பட்டுள்ளன.

வெள்ளிக்கிழமை இரவு இச்சம்பவம் நடந்தது.

(இ-15)

## ஒப்பந்தம் இல்லையேல் இலங்கை பிளவுபட்டிருக்கும்
### லோகசபையில் நட்வர்சிங்

புதுடில்லி, ஆக. 29

சென்ற 29 ஆம் திகதி இந்திய-இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்படாதிருந்தால் இலங்கை பிளவு பட்டிருக்கும்.

இப்படி இணை அமைச்சர் நட்வர்சிங் நேற்று லோகசபைக் கூட்டத்தில் இந்திய - இலங்கை ஒப்பந்த விவாதத்தின் மீது கலந்து கொண்டு பேசுகையில் இதனைத் தெரிவித்தார்.

மூன்று வாரங்களாக ஒப்பந்தத்தை அமுல் நடத்துவதில் முன்னேற்றம் காணப்பட்டுள்ளது.

ஒப்பந்தம் கைச்சாத்திடப்படாது இருந்தால் இரண்டு நாடுகளிலும் பெரிய பிரச்சினைகள் ஏற்பட்டிருக்கும்.

தமிழீழ விடுதலைப்புலிகள் தலைவர் பிரபாகரன் ஆக்க பூர்வமான முறையில் உதவி வருகின்றார்.

இப்படி இணைஅமைச்சர் நட்வர்சிங் சொன்னார். (இ-எ)

முதலாவது

## பிறந்ததின வாழ்த்து

✶ செல்வன் செல்வகபிலன் ✶



அளவெட்டி தெற்கைச் சேர்ந்த செல்வரட்ணம் கோமதி தம்பதிகளின் செல்வப் புதல்வன் செல்வகபிலன் 20-8-87 இன்று தனது முதலாவது பிறந்தினத்தைக் கொண்டாடுகின்றார்.

இவரை அப்பா, அம்மா, அப்பம்மா, அம்மம்மா, சித்தப்பாமார், சித்திமார், அத்தைமார், மச்சாள்மார், மச்சான்மார் மற்றும் உறவினர்கள் நண்பர்கள் பல்கலையும் கற்று சீருடனும் சிறப்புடனும் பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றார்கள்

(1499)

# பிரயாண ஒழுங்குகள்

★ குவைத் ★ சவூதிஅரேபியா ★

பின்வரும் வேலைகட்கு ஆட்கள் தேவையாக இருக்கிறது விருப்பமுள்ளவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்

★ சவூதி அரேபியா, Leading American Managed Hospital

★ FEMALE MEDICAL RECORDS CLERKS — இரண்டு வருட அனுபவம், ஆஸ்பத்திரி மருத்துவ பதிவாளர் (Hospital Medical Records Dep rtment)

★ FEMALE WARD CLERKS
ஒருவருட அனுபவம்; ஆஸ்பத்திரிவாட் எழுதுவினைஞர்.
Hospital Ward Clerk

★ MALE SUPPLY CLERKS
ஒரு வருட அனுபவம் வழங்கல் பகுதி
One year supply Poition

★ சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்
★ இரண்டு வருட ஒப்பந்தம்
★ இலவச சாப்பாடு தங்குமிட வசதி
★ உடனடிப் பிரயாணம்

Approval No. AL / 96/13/87

★ HOSPITAL SUPERVIS R (Cleaning Section)
இதற்கு Passport தந்தவர்கள் உடன் தொடர்புகொள்ளவும்

## ★ குவைத் ★

★ கனரக வாகன சாரதிகள் HEAVY DUTY DRIVERS } சம்பளம் 105 K.D.
குவைத் கனரக சாரதியாக வேலை செய்யக்கூடிய குவைத் வாகன அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள்
★ 1 வருட அனுபவம் (K. T. Licence)

★ LIGHT DUTY DRIVERS பாரம் குறைந்த வாகன சாரதிகள் } 85 K. D.
குவைத் பாரம்குறைந்த வாகன சாரதியாக வேலை செய்யக்கூடிய வாகன அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள்
1 வருட அனுபவம் (K. T. Licence)

★ இரண்டு வருட ஒப்பந்தம்
★ இலவச தங்குமிடவசதி
★ உடனடிப் பிரயாணம்

Approval No. 96/Advt./12/87

★ Labour Licence No. 96

★ I. K. D. 106 S. R.

★ 20 ஆம் திகதி காலை இங்கிலாந்து பிரயாணம்

★ மிக முக்கிய அறிவித்தல்

BES Engineering Corporation (Thaivan) Kuwait. இது சம்பந்தமாக Pass Port தந்து Free Selection முடிந்த அனைவரும் 23-08-87 க்கு முன்சந்திக்கவும்

தலைமை அலுவலகம்:

**Construction & Development Company Ltd.**

37, S. D B. S. Jeyasinghe Mawatha, Nugegoda.

தொடர்பு:

V. P. பாலசுப்பிரமணியம்
(V. P. BALA)

c/o. N. V. பொன்னுத்துரை, பாடசாலை வீதி,
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.

## செய்திக்கொத்து

### கிழக்கில் 136பேர் விடுதலை

கல்முனை, ஆக. 20

அக்கரைப்பற்று கமாண்டோ முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 112 இளைஞர்களும், திருக்கோவில் முகாமில் இருந்த 24இளைஞர்களும் இந்திய அமைதிகாக்கும் படையினர் முன்னிலையில் கடந்த சனிக்கிழமை விடுதலை செய்யப்பட்டனர்.

இந்தியப் படையினருடன் அக்கரைப்பற்று பிரசைகள்குழுத் தலைவரும், சமூகத் தொண்டருமான ஜனாப். ஏ. எம். அகமட் லெவ்வை, பிரசைகள் குழுவின் பிரதித் தலைவர்களான வண. பிதா அன்னதாஸ், இலி. சிவஞானச்செல்வக்குருக்கள் ஆகியோர் முகாம்களுக்குச் சென்றிருந்தனர். (இ-84)

### காணித் தகராறு: நால்வர் காயம்

யாழ்ப்பாணம், ஆக. 20

அரச காணி ஒன்றில் குடியேறச் சென்றவர்களிடையே ஏற்பட்ட மோதலில் தாயாரும் அவரது மூன்று பிள்ளைகளும் கத்தி வெட்டுக்கு இலக்கானார்கள்.

செவ்வாய் காலை 9மணி அளவில் மயிலிட்டிப் பகுதியில் இச்சம்பவம் நடைபெற்றது.

தாயாரான இராசரத்தினம் பசுங்கிளி (வயது 65), பிள்ளைகளான சாந்தா (வயது 29), கமலேஸ்வரி (வயது 27), யோகேஸ்வரி (வயது 23) ஆகியோரே காயம் அடைந்தவர்கள் ஆவர்.

(இ-10)

### விநியோகம் நிறுத்தம்

சாவகச்சேரி, ஆக.20

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் ... விப்பொருள்கள் வழங்கு... [illegible] செய்துள்ளது.

மொத்தம் 23 கிளைகளில் பத்துக் கிளைகளில் மட்டுமே இரு தினங்கள் விநியோகம் இடம்பெற்றது. ஏனைய 13 கிளைகளின் விநியோகம் எப்போது எனப் பொதுமக்கள் எதிர்பார்க்கின்றனர் (இ-31)

### கூட்டுறவு பரிசோதகர்

வேலணை, ஆக 20

தீவுப்பகுதிக்கான கூட்டுறவுப் பரிசோதகராக திரு. ஏ நாகேஸ்வரன் இம்மாதம் முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

(இ-167)

### வல்வைவாசி மரணம்

கொழும்பு, ஆக. 20

கப்பலில் வேலைபார்த்து வந்த வல்வெட்டித் துறை ஏ. எம்.எஸ். வீதியைச் சேர்ந்த சின்னத்தம்பி விஜயகசுந்தரம் என்பவர் கப்பலில் ஏற்பட்ட விபத்துக் காரணமாக உயிரிழந்தார்என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இங்கிலாந்து கிங்ஸ்டன் துறைமுகத்தில் வைத்தே இந்த விபத்து இடம் பெற்றது. (இ-எ)

### இந்திய இராணுவ பொறுப்பதிகாரி

திருகோணமலை, ஆக.20

இந்திய இராணுவத்தின் பொறுப்பதிகாரியாக திருகோணமலையில் கேர்ணல் ஜி. எஸ். பாலி பணிபுரிகின்றார்.

(இ-எ-150)

### காரைநகரில்

காரைநகர், ஆக.20

காரைநகர் பிரதான வீதியைத் திருத்தும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டு வருகின்றது.

(இ-73)

### பயிற்சிக் கருத்தரங்கு

அனலைதீவு, ஆக.20

யாழ் மாவட்டத் ... சுகாதாரப் பரிசோதகர்களுக்குத் தொற்றுநோய் கண்காணிப்பு, சுற்றுடல் சுகாதாரத் தகவல்முறைகள், உணவுப் பாதுகாப்பு முறைகள் பற்றிய பயிற்சிக்கருத்தரங்கு யாழ்ப்பாணம் அரசினர் வைத்தியசாலை பயிற்சி மண்டபத்தில் நடைபெற்றது.

யாழ் மாவட்ட பதில் பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சா. விஜயராசா கருத்தரங்கை ஆரம்பித்துவைத்தார் (இ-18)

### விதவைகளுக்கு அன்பளிப்பு

சங்கானை, ஆக. 20

சங்கானை கிழக்கு கிராம அபிவிருத்திச்சங்க அங்கத்தவர்களான மூன்று விதவைப் பெண்களுக்கு அகில உலக தரிசன நிதிநிறுவனம் மறுவாழ்வு அன்பளிப்பாக ரூபா 7800 வழங்கியது

(இ-29)

### அகதிகளுக்கு உதவி

புங்குடுதீவு, ஆக.20

வன்செயல்களினால் பாதிக்கப்பட்டு, திருமலை, வவுனியா, கிளிநொச்சி, செட்டிகுளம், வடமராட்சி ஆகியபகுதிகளிலிருந்து அகதிகளாக வந்து புங்குடுதீவில் தங்கியிருந்த 66 குடும்பங்களைச் சேர்ந்த 500க்கும் அதிகமானோருக்கு யாழ் ம்னித முன்னேற்றச் சங்கத்தினால் 10 ஆயிரம் ரூபா பெறுமதியான உணவுப்பொருள்கள் புங்குடுதீவு புனித பிரான்சிஸ் சவேரியார் தேவாலயத்தில், பங்குத்தந்தை அருட்திரு கிறிஸ்டி செல்வராஜா தலைமையில் வழங்கப்பட்டன.

(இ-131)

## கேள்வுப்பத்திரம்

**Lanka Cement Limited**

Kankesanthurai

முருங்கன் களிமண் ஏற்றிவந்து தொழிற்சாலையில் விநியோகிப்பதற்கான கேள்வுப் பத்திரம் (TENDER)

Tender No. LCL/SU/K/T/01/87

காங்கேசன்துறையில் உள்ள எமது

சீமெந்துத் தொழிற்சாலைக்கு

முருங்கன் களிமண் நிலையத்தில் இருந்து லொறிகளில் களிமண் ஏற்றி இறக்குவதற்கான கேள்வுப் பத்திரங்கள் (Tenders) கோரப்படவுள்ளன.

மேற்படி கேள்வுப் பத்திரங்கள் (Tender-Documents) விநியோக அதிகாரியின் காரியாலயத்தில் சாதாரண வேலை நாட்களில் காலை 8-30 முதல் மாலை 4-00 வரையிலும் 22-8-87 சனிக்கிழமை பகல் 12-00மணிவரையும் மீளப் பெறமுடியாத வைப்புப் பணமாகரூபா 50/- செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்வுப்பத்திரங்கள் 26 - 8 - 87 மாலை 4-00 மணி வரை விநியோகிக்கப்படும்.

கேள்வுப்பத்திரதாரரால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்வுப்பத்திரங்கள் 27 - 8 - 1987 முற்பகல் 10-00 மணிக்கு கேள்வுப்பத்திரதாரர் முன்னிலையில் திறக்கப்படும்.

பிரதிப் பொதுமுகாமையாளர்,
லங்கா சீமெந்து லிமிட்டெட்,
18.8.1987 காங்கேசன்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

போதும் என்ற மனத்திற்குத் தினமும் விழாக்காலமாயிருக்கும்.

— பகவான் சத்திய சாயிபாபா—


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல:- 292/2 நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம் 22078
20.8.1987 த.பெ.இல: - 23


## ஜனாதிபதியின் போராட்டம்

கோட்டேயில் உள்ள நாடாளுமன்றக் கட்டடத்தில், அரசாங்க எம். பிக்களின் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த போது துப்பாக்கிச் சூடும், கிரனேட் வீச்சும் நடந்திருக்கின்றன.

கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற இந்த வன்செயலில் மாத்தறை மாவட்ட அமைச்சர் திரு. கீர்த்தி அபயவிக்கிரமா உயிரிழந்துள்ளார்.

அமைச்சர்கள் லலித்அத்துலத்முதலி, வின்சென்ட் பெரேரா ஆகியோரும் மற்றும் சில அமைச்சர்களும், எம். பிக்களும் காயமுற்றனர்.

ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவைக் கொலை செய்யும் முயற்சியாகவே இந்தப் பயங்கரச் சம்பவம் நடந்திருக்கிறது. எனினும் ஜனாதிபதிக்கு எவ்வித ஆபத்தும் நடக்கவில்லை.

இலங்கை – இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தாவதற்கு முன்னரே, அதனை எதிர்த்துத் தெற்கில் பெரும் பூகம்பம் வெடித்தது கோடிக் கணக்கான ரூபா பெறுமதியான பொதுச் சொத்துக்கள் நாசமாக்கப்பட்டன.

எனினும் ஊரடங்குச் சட்டத்தை அமுல் நடத்தி ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டார் ஜனாதிபதி திரு. ஜெயவர்த்தன. அந்தக் கணத்திலிருந்தே தெற்கில் வன்செயல்கள் மேலும் நடக்கலாம் என எதிர்பார்க்கப்பட்டதுதான்.

ஒப்பந்தத்துக்கு ஆதரவாக வாக்களித்தால் எம். பிக்கள் கொலை செய்யப்படுவார்கள் என்ற பயமுறுத்தல்கள் அங்குள்ள ஆபத்தான சூழ்நிலையையே பிரதிபலித்தது.

கடந்த மூன்று வாரங்களாக அரசுமேற்கொண்ட பாதுகாப்பு நடவடிக்கைகளாலும், பிரசார நடவடிக்கைகளாலும் தென் இலங்கை எதிர்ப்பு அடக்கப்பட்டிருந்தது.

ஆனால் ஜனாதிபதி மீதான கொலை முயற்சிச் சம்பவம் தென்னிலங்கையில் இனவாதம் அழியவில்லை என்பதையே எடுத்துச் சொல்கிறது.

இலங்கை – இந்திய ஒப்பந்தம் தமிழீழத்தை வழங்குவதற்கு வகை செய்கிறது என்ற இனவாத சக்திகளின் பிரசாரமே தெற்கில் வன்செயல்களுக்கு அடித்தளமாக இருந்தது; இருக்கிறது.

ஆனால் உண்மையில், ஒப்பந்தம் தமிழர்களுக்கு பெரிதாக நன்மை எதுவும் செய்யாது, அவர்களது அபிலாஷைகளை நிறைவேற்ருது எனக் கூறித் தமிழர்களால் நிராகரிக்கப்பட்டிருக்கிறது.

அப்படியிருக்கவும், தெற்கில் உள்ள இனவாத சக்திகள், தமிழர்களுக்கு சிறு சலுகைகளைத்தானும் வழங்கக்கூடாது என்ற தமது பாரம்பரியமான சூழ்ச்சி நோக்கத்தை இன்னும் கைவிட்டதாக இல்லை என்பதையே செவ்வாய்க்கிழமைச் சம்பவம் எடுத்துக் காட்டுகிறது.

இப்படியான ஒரு பின்னணிச் சூழலில், தமிழரும், சிங்களவரும் இனிமேல் சேர்ந்து வாழும் ஒரு சாத்திய நிலை தோன்றுமா என்ற சந்தேகம் எவருக்கும் ஏற்படவே செய்யும்.

தமிழர்களுக்கு உரிய உரிமைகளை வழங்காது அவர்களை அடிமைகளாகவே வைத்திருக்க வேண்டும் என்ற எண்ணம் தென் இலங்கை மக்கள் மத்தியில் ஆழமாக ஊன்றப்பட்டு விட்டது. அந்த எண்ணத்தை — இனவாதத்தை அவர்களிடமிருந்து பிரிப்பது என்பது முடியாத காரியமாகி விட்டது. இந்த நிலையை உருவாக்கியவர்கள் தென்னிலங்கை அரசியல் வாதிகளே என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. குறிப்பாக இப்போதைய ஜனாதிபதிக்கு அதில் பெரும்பங்கு உண்டு.

சிங்களத்தை மட்டும் உத்தியோக மொழியாக்க வேண்டும் என்ற அகரவரிசையிலிருந்து, பண்டா – செல்வா ஒப்பந்தத்தைக் கிழித்தெறியச் செய்ததுவரை இனவாதத்தை வேரூன்றச் செய்வதில் அவர் பெரும் பங்கு கொண்டார்.

இப்போது அவர் தாம் விதைத்த வினையைத் தாமே அறுவடை செய்ய வேண்டியதாயிற்று. இது இயற்கையானது. தவிர்க்க முடியாதது. இது குறித்து எவரும் கவலைப்பட்டும் ஆகப்போவது எதுவுமில்லை.

இலங்கை இந்திய ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட பின்னர், தாம் முன்னர் பல தவறுகள் விட்டதாக அவர் ஒப்புக்கொண்டிருக்கிறார். அவர் அந்தத் தவறுகளுக்குப் பிராயச்சித்தம் செய்தாக வேண்டுமெனில் தமிழர்களின் உரிமைகளை முழுமையாக வழங்க வேண்டும். ஆனால் அவரால் அப்படிச் செய்ய முடியாது என்பதை செவ்வாய்க்கிழமைச் சம்பவம் எடுத்துக் காட்டியிருக்கிறது.

தமது தவறுகளுக்காகச் சிறிய அளவு பிராயச்சித்தம் தானும் செய்வதற்கு அவரது வினை விட்டுக் கொடுக்காது என்பதே சரியான நிலைப்பாடு. தனது வினையை எதிர்த்துத் தானே போராட வேண்டிய துரதிர்ஷ்டமான நிலை அவருக்கு ஏற்பட்டிருக்கிறது.

# ஆப்கன் அரசியல் தீர்வு முயற்சி தொடர்கிறது

## ஜனாதிபதி நஜிபுல்லா அறிவிப்பு

காபூல், ஆக. 19

ஆப்கானிஸ்தானில் அரசியல் இணக்கம் ஒன்றை ஏற்படுத்தும் முயற்சிகள் தொடர்வதாக ஆப்கன் ஜனாதிபதி நஜிபுல்லா தெரிவித்தார்.

தொலைக்காட்சி, வானொலி உரைகளை நிகழ்த்திய போது அதிபர் நஜிப் இதனை வெளியிட்டார்.

அரசியல் இணக்க வேலைகளைத் துரிதப்படுத்துவதற்கும் எதிர்க்கட்சிகளுக்கு இன்னொரு சந்தர்ப்பத்தை வழங்கவும் ஒரு தலைப்பட்சமான யுத்த நிறுத்தத்தை அடுத்த ஆண்டு ஜனவரி 15வரை நீடித்திருப்பதாகவும் ஆப்கன் தலைவர் அறிவித்தார். (இ-எ)

## முற்றுகையை ஈரான் நீக்கியது

தெஹ்ரான், ஆக. 19

தெஹ்ரானில் உள்ள சவூதி அரேபியத் தூதரகத்தின் மீதான இரண்டு வாரகால முற்றுகையை ஈரான் அரசு நீக்கிவிட்டது.

ஜுலை 31இல் இடம்பெற்ற மக்கா படுகொலையைத் தொடர்ந்து சவூதி அரேபியத் தூதரகம் முற்றுகையிடப் பட்டது.

இம் முற்றுகையின் போது காயமடைந்த சவூதி அரேபிய இராஜதந்திரி ஒருவர் பின்னர் மரணமடைந்ததாக அறிவிக்கப்பட்டது. (இ-எ)

**வெளி உலகில்**

ராஜீவ் கூறுகிறார் :

## இடைக்கால நிர்வாகம் ஏற்படுத்த அரசமைப்பில் திருத்தம் தேவை இல்லை

புதுடில்லி, ஆக. 19

வடக்கு, கிழக்கு மாநில சபைக்கு இடைக்கால நிர்வாகம் ஒன்றை ஏற்படுத்த அரசமைப்புச் சட்டத்தில் திருத்தம் செய்ய வேண்டியதில்லை. அரசாங்கத்தின் ஆணை ஒன்றின் மீது இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்தலாம். இப்படி பிரதமர் ராஜீவ்காந்தி தெரிவித்தார்.

இந்திய வெளியுறவு அமைச்சின் நாடாளுமன்ற ஆலோசனைக்குழுக் கூட்டத்தில் பிரதமர் இந்திய–இலங்கை ஒப்பந்தம் பற்றி விளக்கமளித்தார்.

அப்போதே மேற்கண்ட விளக்கத்தை அளித்தார்.

கூட்டத்துக்கு இணை அமைச்சர் நட்வர்சிங் தலைமை வகித்தார்.

ஒப்பந்தம் அமுல் நடத்தப்படுவது குறித்து பிரதமர் கண்ணும் கருத்துமாக இருந்து நிலைமைகளை ஆராய்ந்து வருகின்றார் என்று கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

ஒப்பந்தம் அமுல் நடத்தப்படுவதில் தற்சமயம் காணப்படும் தாமதங்கள், ஒப்பந்தம் கைச்சாத்தாவதற்கு முன்னரே எதிர்பார்க்கப் பட்டவை தான்—

## 24 நோயாளிகளை விஷ ஊசி போட்டு கொன்ற ஆஸ்பத்திரி ஊழியர்

வாஷிங்டன், ஆக. 19

தனது பதற்றத்தைத் தணிக்க 24 நோயாளர்களை விஷ ஊசி போட்டுக் கொலை செய்த ஆஸ்பத்திரி பணியாளர் ஒருவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

ஹார்வி என்ற பெயர் கொண்ட எதிரி இது சம்பந்தமான மூன்று வழக்குகளில் குற்றத்தை ஒப்புக் கொண்டார்.

இதைத் தொடர்ந்து அவருக்கு ஒவ்வொரு வழக்கிலும் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

ஆயுள் தண்டனைகளை அடுத்தடுத்து அனுபவிக்க வேண்டும் என்று எதிரிக்கு உத்தரவிடப்பட்டது.

''எதிரி ஒரு கிரிமினல். மனப்பதற்றத்தில் நிம்மதி பெற இக்கொலைகளைச் செய்திருக்கின்றார்''—இப்படி வழக்குத் தொடருநர் நீதிமன்றத்தில் தெரிவித்தார். (இ-எ)

# பயங்கரவாதம் ஒழிக்கப்படும் வரை

## பஞ்சாப்பில் மக்கள் ஆட்சி இல்லை

புதுடில்லி, ஆக. 19

பயங்கரவாதம் ஒழிக்கப்படும்வரை பஞ்சாப்பில் மக்களாட்சி கொண்டு வரப்பட மாட்டாது.

உள்துறைஇணைஅமைச்சர் ப. சிதம்பரம் லோக்சபாவில் இதனை அறிவித்தார்.

பஞ்சாப்பில் பொருளாதாரத் திட்டங்கள் சரிவர அமுல் நடத்தப்பட ஜனாதிபதி ஆட்சி முறை அங்குநிலவ வேண்டியது அவசியம் என்றும் இணை அமைச்சர் தெரிவித்தார்.

எல்லைப்புற பக்கத்தில் இருந்து பஞ்சாப் தீவிரவாதிகளுக்கு உதவிகள் கிடைக்கின்றன என்று குறிப்பிட்ட இணை அமைச்சர் அந்த நாடு எது என்று குறிப்பிடவில்லை. (இ-எ)

## கென்னடியின் அழைப்பை வலேஸா ஏற்ருர்

வாஷிங்டன், ஆக. 19

அமெரிக்காவின் 200 ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டங்களில் கலந்து கொள்ள அமெரிக்கா வரும்படி விடுத்த அழைப்பை போலந்து தொழிற்சங்கத் தலைவர் வலேஸா ஏற்றிருக்கின்ருர்.

அமெரிக்க செனட்டர் எட்வர்ட் கென்னடிஇந்த அழைப்பை விடுத்திருந்தார். (இ-எ)

## சோவியத் தலையீடு இல்லை

மாஸ்கோ, ஆக. 19

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் சோவியத் யூனியனின் தலையீடு கிடையாது.

இப்படி சோவியத் வெளிநாட்டமைச்சுப் பேச்சாளர் தெரிவித்தார்.

உபஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் அமெரிக்க ஜனாதிபதியாக வரவேண்டும் என்று சோவியத் தலைவர் மிக்செய்ல் கோர்பச்சேவ் தெரிவித்ததாக அமெரிக்காவின் 'நியூஸ் அன்ட் த வேர்ல்ட்' பத்திரிகையில் வெளிவந்த செய்தி தவருனது. சோவியத் தலைவர் கோர்பச்சேவ் அப்படி எவரிடமும் தெரிவிக்கவில்லை.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் தலையிடும் கொள்கையை சோவியத் யூனியன் கடைப்பிடிக்கவில்லை.

இப்படி வெளிநாட்டமைச்சுப் பேச்சாளர் தெரிவித்தார். (இ-எ)

# எந்த ஒரு வல்லரசையும் நான் நம்ப மாட்டேன்

## தனிப்பட்ட நட்பில் தான் எனக்கு நம்பிக்கை --ஜே. ஆர்

லண்டன் டைம்ஸ், நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகைகளுக்கு ஜனாதிபதி ஜெயவர்த்தன அளித்த பேட்டியின் ஆரும் பகுதி இங்கு பிரசுரமாகிறது.

கேள்வி: உங்கள் உதவிக் கோரிக்கைக்கு ஏனைய நாடுகள் பெரிய அளவில் உதவ முன்வரவில்லை. இதனுல் சோவியத் கப்பல்களுக்கு திருமலையில் இடம் கொடுக்கும்படி இந்தியா ஆலோசனை கூறுமிடத்து அதை எதிர்க்கக் கூடிய தைரியம் உங்களிடம் குறைந்து காணப்படும்?

ஜே.ஆர்: அப்படித்தான். எந்த நாட்டுக்கும் எதிராக நிமிர்ந்து நிற்க எம்மால் முடியாது. அவர்கள் எம்மை ஆக்கிரமிக்க முடியும். ஆனல் எமது மக்கள் விட்டுக் கொடுக்க மாட்டார்கள். நான் இந்த நாட்டை வழி நடத்தும் வரை நாம் விட்டுக் கொடுக்க மாட்டோம். ஆளப்பட விரும்பாத மக்களை எவராலும் ஆளமுடியாது

கேள்வி: கைவிடப்பட்ட நிலையில் இருப்பதாக நீங்கள் உணருகின்றீர்களா?

ஜே.ஆர்: முழுவதாக இல்லை. கைவிடப்பட வேண்டும் என்றே நான் விரும்புகின்றேன். ஒரு வல்லரசையும் நான் நம்ப மாட்டேன்.

கேள்வி: ஒரு வல்லரசைக் கூட நம்ப மாட்டேன் என்று கூறுகின்றீர்கள்; ஆனல் இந்திய இராணுவத்தை - உங்கள் நாட்டில் வைத்துள்ளீர்களே!

ஜே.ஆர்: ஆம். அவர்கள் என் [illegible] உள்ளனர்.

கேள்வி: அவர்கள் விரும்பும் வரை?

ஜே.ஆர்: ஆம். எந்த நிலையிலும் அது நடக்கின்றது. நான் ராஜீவ் காந்தியை நம்புகின்றேன்.

கேள்வி: ஒரு வல்லரசையும் நம்பமாட்டேன் என்று நீங்கள் கூறுவதற்கு இது ஒரு விதி விலக்கு?

ஜே ஆர்: வெளிநாட்டு ஆட்சியாளர் மத்தியில் எனக்கு சில நண்பர்கள் உள்ளனர். தனிப்பட்ட நட்பில்தான் எனக்கு நம்பிக்கை. ஒரு கட்டத்தில் சீன, சோவியத்துடன் நட்புறவு வைத்து இருந்தது. சீன ஆக்கிரமித்த போது இந்தியா அமெரிக்காவிடம் உதவி கோரியது. அமெரிக்க பொம்மர் விமானங்கள் புதுடில்லியில் வந்திறங்கின.

கேள்வி: இந்த நெருக்கடியான கட்டத்திலும் நீங்கள் ராஜீவ் காந்தியின் தனிப்பட்ட நட்பில்தான் தங்கியுள்ளீர்களா?

ஜே.ஆர்: ஆம். ஆம். இப்போது சீனமீது சோவியத் கோபம் கொண்டுள்ளது. பெரிய வல்லரசுகள் பற்றி ஒன்றுமே சொல்ல முடியாது. ஒருவரையும் நம்ப முடியாது. இந்தியாவும் அதே மாதிரி. ஆனல் ராஜீவ் காந்தியுடன் நான் நட்பாக இருக்கிறேன்.

கேள்வி: தூரதிருஷ்டியும் துணிச்சலும் இல்லாததினுல் தான் இந்த விதமான இணக்கத்தை உங்களால் காணமுடியாதிருந்ததாகக் கூறியிருக்கின்றீர்கள். இன்னும் அப்படித்தான் உணருகின்றீர்களா?

ஜே. ஆர்: விசேடமாக மொழிப் பிரச்சினையில் அப்படித்தான் நடந்து கொண்டேன். சிங்கள மொழியை உத்தியோக மொழியாக்க வேண்டும் என்ற பிரேரணையை நான் [illegible] 1943 ஆம் ஆண்டு [illegible] அப்பிரேரணை விவாதிக்கப்பட்டபோது பலத்த எதிர்ப்பு இருந்தது. தமிழையும் சேர்க்க வேண்டும் என்று சிறுபான்மையினர் தெரிவித்தனர்.

அதை நான் ஏற்றுக் கொண்டு திருத்தம் கொண்டு வந்தேன். பின்னர் பிரேரணை நிறைவேற்றப்பட்டது. அதன் பின்னர் எமது கட்சியின் நிலை சிங்களம், தமிழ் உத்தியோக மொழிகள் என்றே இருந்து வந்தது.

பின்னர் பண்டாரநாயக்கா எம்மைவிட்டு விலகினர். அவரின் கட்சிக் கொள்கையும் சிங்களம், தமிழ் என்றே இருந்தது.

1956க்கு முன்னர் இரண்டு கட்சிகளும் மொழிக் கொள்கையை மாற்றிக் கொண்டன. சிங்களம் மட்டும் கொள்கையை இரண்டு கட்சிகளும் ஏற்றுக் கொண்டன.


அது ஒரு தவறு. நாம் எம் கொள்கையை மாற்றி இருக்கக்கூடாது. பண்டாரநாயக்கா தேர்தலில் வெற்றியீட்டினர். உடனே மொழிக் கொள்கையை மாற்றினர். வடக்கு, கிழக்கு மாகாணங்களின் உத்தியோக மொழியாகத் தமிழ் மொழி இருக்கும் என்று சட்டம் கொண்டு வந்தார்.

சிங்களம் மட்டும் கொள்கையை பண்டாரநாயக்கா அமுல் நடத்தவில்லை. பின்னர் வடக்கு-கிழக்கு ஓர் அமைப்பாக இருக்க பண்டாரநாயக்கா சம்மதித்தார். நாம் அதை எதிர்த்தோம். இது போன்ற பிழைகளை இருதரப்பினரும் விட்டனர்.

கேள்வி: மூன்ருவது முறையாக ஜனாதிபதித் தேர்தலில் [illegible] வீர்களா?

ஜே.ஆர்: இல்லை,

(4ம் பக்கம் பார்க்க)



**பொய்யாமொழி**

**குறள்:**

பொச்சாப்பார்க்கு இல்லை புகழ்மை அதுவுலகத்து
எப்பால்நூ லோர்க்கும் துணிவு.

**பொருள்:**

மறதியால் சோர்ந்து நடப்பவர்க்குப் புகழுடன் வாழும் தன்மையில்லை; அஃது உலகத்தில் எப்படிப்பட்ட நூலோர்க்கும் ஒப்ப முடிந்த முடிபாகும்.

## மோட்டார் சைக்கிள் ரோந்து

கொக்குவில், ஆக. 20

இந்திய இராணுவத்தினர் சீருடையுடன் கோட்டையிலிருந்து, காங்கேசன்துறை வரை கே. கே. எஸ். வீதியினுல் மோட்டார் சைக்கிளில் ரோந்து சுற்றி வருகின்றனர். (இ-69)

## குமரவேள் கூத்தாடும் நல்லூர்க் கோயில்

தமிழ்ஒழுகு வளம்பெருகச் சாந்தி
பொங்க(ச்)
சைவநெறி தழைத்தோங்க
மாண்புவிஞ்ச(க்)
குமிழ்சுடரும் அருட்பொலிவு
குதிக்கத்தெய்வக்
குதூகலத்தில் அடியர்குழாம்
குளிப்புஆடக்
கலைஒளியிக் கைதேர்ந்த கையின்வண்ணம்
களிப்பூட்டி வெளிக்காட்டக் கந்தவேளின்
நிலையுயரு திருவேலின் மந்தகாசம்
நிறைந்துஅருள் சுரந்தொளிரும்
நல்லூர்க்கோயில்!

★

வீதியெலாம் தெய்வீகச் சுகந்தத்தென்றல்
வீசிமுரு கையனவன் ஆசிகூற
ஓதிவரும் வேதஒலி பண்ணின்ஓசை
ஓங்காரத் துட்பொருளை உணர்த்திநிற்கச்
சேதிநலம் சொல்வதுபோல் மணியின்ஓசை
திசைஅறைந்து எதிரொலித்து
வரங்கள்சேர்க்க
ஆதியோடு அந்தமெலாம் ஐயன்கந்தன்
அப்பனவன் என்றுசொல்லும்
நல்லூர்க்கோயில்!

★

கமழ்மணத்தின் மலர்தொடுத்து மாலைஆக்கிக்
கந்தவேள் வேல்களிக்க கனிந்துசாத்திப்
புகழ்மணக்க இருமாதர் புடையேசூழப்
போற்றிசய போற்றியென
அடியார்ஏத்த
அகல்விசும்பின் வீதியுலா, அழகுத்தெய்வம்
அலங்காரம் நலங்காமல் ஊர்தி ஊர்ந்து
செகசெகக்கச் செவ்வேளாய்ச் சிறக்கும்
சீர்த்தித்
தெய்வீகம் தெளிவுதரும்
நல்லூர்க்கோயில்!

நயினைக் கவிஞர்
நாக. சண்முகநாதபிள்ளை

## "ஒப்பந்தம் முறியாமல் பார்த்துக் கொள்க"

யாழ்ப்பாணம், ஆக. 20

இந்திய – இலங்கை சமாதான ஒப்பந்தம் பற்றி யாழ் மறைமாவட்ட நீதி, சமாதான அபிவிருத்தி ஆணைக்குழு ஜனாதிபதி ஜெயவர்த்தனவுக்குக் கடிதம்ஒன்றை அனுப்பியது.

கடிதத்தின் சில பகுதிகள் வருமாறு:

தமிழருக்குச் சுதந்திரம், சமத்துவம், பாதுகாப்பு, இனப் பாதுகாப்பு, நிரந்தரத் தாயகம் ஆகியவற்றை உறுதிப்படுத்தும் நிரந்தரத் தீர்வு ஒன்றுக்கு இந்திய—இலங்கை ஒப்பந்தம் வழிவகுக்கும் என்றுநம்புகின்ருேம்.

அஹிம்சை வழியில் தங்கள் இழந்த உரிமைகளைப் பெற தமிழர்கள் முப்பது ஆண்டுகளாக முயற்சித்தனர். சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தித் தீர்வுகாண அரசியல் வாதிகள் தவறிவிட்டனர். விரக்தி அடைந்த நிலையில் வேறு வழியின்றித் தமிழ் இளைஞர் ஆயுதங்களைத் தூக்கினர். இன்று தீர்வு வருவதற்கு அதுவே மூக்கிய காரணமாக அமைந்தது.

ஒப்பந்தத்தை அமுல் நடத்துவதை மேற்பார்வையிடுவதுடன் முறியாமல் பார்த்துக் கொள்ளவேண்டும் என்றும் நாம் இந்திய அரசு ஆகியவற்றைக் கேட்டுக் கொள்கின்ருேம்.

இப்படி ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதத்தில் கூறப்பட்டுள்ளது. (இ-எ)

## பொன்னலையில்

காரைநகர், ஆக. 20

இந்திய இராணுவத்தினர் சுமார் எட்டு டிரக் வண்டிகளில் வந்து பொன்னலை வரதராஜப் பெருமாள் வீதியிலுள்ள வெளியில் முகாமிட்டுள்ளனர்.

இவற்றில் நான்கு டிரக்குகள் முகாமில் நிற்க மிகுதி நான்கும் பலாலி நோக்கிச்சென்று விட்டன. (இ-73)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

★ பல வண்ணச் சேலைகள்
★ அழகான பிளவுஸ் பீஸ்கள்
★ சேட்டிங் சூட்டிங் புடைவைகள்
மற்றும்
★ சகல றெடிமேட் ஆடைகளுக்கும்
விஜயம் செய்யுங்கள்

**மயூரா சென்ரர்**
70, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.

# உதயன்

20 - 08 - 1987 வியாழக்கிழமை

★ பல வண்ணச் சேலைகள்
★ அழகான பிளவுஸ் பீஸ்கள்
★ சேட்டிங் சூட்டிங் புடைவைகள்
மற்றும்
★ சகல றெடிமேட் ஆடைகளுக்கும்
விஜயம் செய்யுங்கள்

**மயூரா சென்ரர்**
70, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.

ஈழப்பிரச்சினை குறித்து

## தமிழக மக்களுக்கு தெளிவாக எடுத்துக் கூறப்படவில்லை

### இராணுவ அட்டூழியமே பிரச்சினை என நினைக்கிறார்கள்

— அலுவலகச் செய்தியாளர்:- சண் ஜோண்சன் —

யாழ்ப்பாணம் ஆக. 20

ஸ்ரீ லங்கா இராணுவம் தமிழ்மக்களையும் அவர்களின் சொத்துக்களையும் அழித்து வந்ததே இனப் பிரச்சினை என்று தமிழ் நாட்டு மக்கள் கருதுகிறார்கள். இதனால் தான் இந்தியப் படைகளின் வருகையால் பிரச்சினை தீர்க்கப்பட்டு விட்டதாக தமிழ்நாட்டில் நம்பப் படுகிறது. ஈழப் பிரச்சினையை தமிழ் நாட்டு மக்களுக்கு தெளிவாக எடுத்துக் கூற தமிழ்ப் போராளிகளும் புத்தி ஜீவிகளும் தவறி விட்டார்கள்.

சென்னை பகுத்தறிவு சமதர்ம இயக்கத்தின் செயலாளரும், ஈழம் நண்பர் கழக உறுப்பினருமான பேராசிரியர் ஈழநேசன் மேற்கண்டவாறு செய்தியாளர்கள் மாநாட்டில் தெரிவித்தார்.

இங்குள்ள நிலைமையை அவதானிக்க பேராசிரியர் ஈழநேசன் சென்னையில் இருந்து இங்கு வந்திருந்தார்.

செய்தியாளர் மாநாட்டில் அவர் மேலும்சொன்னதாவது:

இந்திய அரசின் இந்த ஒப்பந்த நடவடிக்கை முற்று முழுதாக தன்னை பாதுகாத்துக் கொள்ளச் செய்யப்பட்டதே.

ஆனால் அதன் பக்க விளைவாக தமிழர்களுக்கும் இருநன்மைகள் ஏற்பட்டுள்ளன.


ஒன்று-ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் கெடுபிடி இடைநிறுத்தி வைக்கப் பட்டுள்ளது.

மற்றையது-இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் வெளிநாட்டு சக்திகளின் ஊடுருவல் தடுக்கப்பட்டுள்ளது.

இப்படி அவர் கூறினார். (இ-7)

### அறிவித்தல்

## உதயம்ஸ்



மொத்தசில்லறைஜவுளியகம்
**18-8-87 முதல் மீண்டும்**
அதே இடத்தில் இயங்குகிறது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

## உதயம்ஸ்
174 (86) கே. கே. எஸ். வீதி,
**யாழ்ப்பாணம்.**
தொலைபேசி : 24150
(1555)

### எந்த ஒரு..
(3-ம்பக்கத் தொடர்ச்சி)

இல்லை, இல்லை அரசமைப்புச்சட்டத்தின் படி என்றால் போட்டியிட முடியாது ஒரு சர்வஜன வாக்கெடுப்பை அதற்காக நடத்த நான் விரும்பவில்லை.

கேள்வி: பதவி விலகப்போகின்றீர்களா?

ஜே. ஆர்: அடுத்த தேர்தலில் எனக்கு 83 வயதாகிவிடும். இப்போது எனக்கு 81:

கேள்வி: 81 வயதில் தலைவராக இருப்பது எப்படி உள்ளது?

ஜே. ஆர்: உடல் ரீதியாகவும் உளரீதியாகவும் நான் சுகதேகியாக உள்ளேன்.

கேள்வி: வயது தலைமைத்துவத்தைப் பாதிக்குமா?

ஜே. ஆர்: இல்லை. (இ-எ)

(வளரும்)

### புனர் வாழ்வு குறித்து ஆராய கூட்டம்

காங்கேசன்துறை, ஆக. 20

வலிகாமம் வடக்கில் வீடு இழந்தவர்கள், மற்றும் சிறு தொழில், விவசாயம், கடற்றொழில் பாதிக்கப்பட்டவர்கள் ஆகியோரின்புனர்வாழ்வு குறித்து ஆராய இன்று வலிகாமம் வடக்கு பிரஜைகள் குழு ஒன்றியத்தின் கூட்டம் நடைபெறுகிறது.

ஒன்றியத் தலைவர் வி. எஸ். கணேசலிங்கம் கூட்டத்திற்குத் தலைமை வகிப்பார்.

அகதிகள் புனர் வாழ்வுக் கழகத் தலைவர் திரு. கா. சிவத்தம்பியும் கூட்டத்தில் பங்குபற்றுவார். (இ-68)

## அமைச்சரவை கூடி ஆராய்ந்தது

கொழும்பு, ஆக. 20

அமைச்சரவைக் கூட்டம் நேற்று புதன்கிழமை நடைபெற்றது.

ஜனாதிபதி ஜெயவர்த்தன தலைமை வகித்தார்.

செவ்வாய்க்கிழமை நடைபெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் உயிரிழந்த மாத்தறை மாவட்ட அமைச்சர் கீர்த்தி அபயவிக்ரமவுக்கு கூட்ட ஆரம்பத்தில் இரண்டு நிமிட மௌனஞ்சலி செலுத்தப்பட்டது.

கொலை முயற்சிச் சம்பவம் குறித்து பதற்றப் படாமல் ஒப்பந்தத்தை அமுல் நடத்துவது பற்றிய நடவடிக்கைகளைத் தொடரும்படியும்—

அது சம்பந்தமான இலங்கை அரசு, இந்திய அரசு அதிகாரிகளுக்கு இடையேயான பேச்சுக்கள் தொடர்ந்து நடத்தப்பட வேண்டும் என்றும் ஜனாதிபதிக்கு அமைச்சர்கள் பலர் ஆலோசனை தெரிவித்தனர்.

—இப்படி பி. பி. சி. வானொலி நேற்று அறிவித்தது. (உ-எ)

## இன்று சபை கூடுகிறது

கொழும்பு, ஆக 20

நாடாளுமன்றம் இன்று வியாழன் மீண்டும் கூடும்.

கடந்த செவ்வாய் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தின் பின்னர் நாடாளுமன்றம் கூடியதும் கோரமின்மையால் கூட்டத்தை இன்றுவரை உபசபாநாயகர் நோர்மன் வைத்தியரத்தின ஒத்திவைத்ததும் குறிப்பிடத்தக்கது.

செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றம் கூடிய போது உபசபாநாயகரைத்தவிர வேறு எவரும் சமுகமளிக்கவில்லை. (இ-எ)

## அரச அதிபர் மாநாடு ஒத்திவைப்பு!

யாழ்ப்பாணம், ஆக. 20

எதிர்வரும் 27,28,29 ஆம் திகதிகளில் நடைபெற இருந்த அரச அதிபர்கள் மாநாடு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

—இவ்வாறு யாழ் அரச அதிபர் திரு.வை.மு பஞ்சலிங்கம் தெரிவித்தார்.

இந்த மாநாட்டில் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன கலந்து கொண்டு உரையாற்ற இருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மேற்படி மாநாட்டுக்கு அனைத்து உதவி அரச அதிபர்களும் அழைக்கப் பட்டிருந்தனர். (உ-7)

### மாற்று---
(1ம் பக்கத் தொடர்ச்சி)

யல்ல.

ஒப்பந்தத்தை இறுதியாக்குவதில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனின் போக்கு ஆக்கபூர்வமானதாகவும்உதவிகரமாகவும் இருந்தது.

ஒப்பந்தத்தின் ஷரத்துக்கள் அந்த இயக்கத்துக்கு நன்றாகத் தெரிந்து இருந்தன.

இலங்கையில் வெளிநாட்டுத் துருப்புக்கள் இல்லை. அங்கு உள்ள பிரிட்டன், இஸ்ரவேல் நாடுகளின் ஏஜன்ஸிகளும் இனி வெளியேறி விடும்.

இந்திய இராணுவம் தனது கடமைகளைச் செவ்வனே செய்துவருகின்றது. அது இலங்கை இராணுவத்துடன் நல்ல தொடர்பை ஏற்படுத்திக் கொண்டுள்ளது. தேவைக்கு அதிகமாக ஒருநாள்கூட இந்திய இராணுவம் இலங்கையில் தங்காது.

வருடக் கடைசியில் தான் மாகாண சபைத் தேர்தல் நடைபெறும். அதுவரையிலான நடைமுறை நிர்வாகத்தில் போராளிகளும் ஈடுபடுத்தப்படுவார்கள்.

—இப்படிஇணைஅமைச்சர் நட்வர்சிங் தெரிவித்தார். (இ-எ)

### இலங்கை---
(1ம் பக்கத் தொடர்ச்சி)

பாக வைக்கப்படும்.

பின்னர் தினமும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் இந்திய அமைதி காக்கும் படையின் உதவியுடன் இலங்கை வங்கிக் கிளைகளில் பணக் கொடுப்பனவுகள் இடம் பெறும் எனவும் தெரியவருகிறது.

இதேவேளை யாழ்ப்பாணத்தில் உள்ள சகல வங்கிகளின் பணப்புழக்க அலுவலகங்களும் முன்பு மாதிரி கோட்டை இராணுவ முகாமில் இயங்கும் என்று யாழ் செயலக உயர் அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார். (இ-7)

### ஜே. வி. பிக்கு பாராட்டு

கொழும்பு, ஆக 20

ஜே. வி. பி இயக்கத்தைப் பாராட்டி கொழும்பு மாநகரில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன.

கடந்த செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றக் கட்டடத்தில் நடத்தப் பட்ட தாக்குதலைப் பாராட்டியே இச்சுவரொட்டிகள் எழுதப்பட்டிருந்தனவாம். (உ-எ)

### நினைவு----
(1-ம் பக்கத்தொடர்ச்சி)

பட்டது.

நேற்று அவருக்கு நினைவு திரும்பியதாக அறிவிக்கப்பட்டது.

பிரதி அமைச்சர் பேர்ஸி சமரவீரவும் சத்திரசிகிச்சையின் பின்னர் தேறி வருவதாக அறிவிக்கப் பட்டது. (அ எ)

### பூநகரி---
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விசாரணைகளை மீண்டும் ஆரம்பித்திருக்கின்றார்கள்.

பூநகரி பிரஜைகள் குழுத்தலைவர் திரு.பொ. தங்கராசா, அப்பகுதி சமாதான நீதிவான் திரு. பொ. தர்மலிங்கம் ஆகியோரும் இச்சம்பவத்தை நேரில் கண்டதாகக் கூறப்படும் சிலரும் வாக்குமூலமளித்தனர்.

''ஈரோஸ் போராளிகளைத் தாக்கிய இராணுவத்தினரை எம்மால் அடையாளம் காட்ட முடியும். ஆனால் அடையாளம் காட்டிய பின்னர் எங்கள் உயிர் உடமைகளுக்குயார்பொறுப்பு?''

— இவ்வாறு வாக்குமூலமளித்த சிலர் இந்திய இராணுவ அதிகாரிகளிடம் கேள்வி எழுப்பியதாகத் தெரிய வருகின்றது.

பூநகரி 4ம் கட்டையடி முகாமில் நிலை கொண்டுள்ள நூற்றுக்கும் அதிகமான ஸ்ரீலங்கா இராணுவ வீரர்கள் வாடியடிக்கு ஆயுதங்களுடன் வருவது குறித்தும்—

வாடியடியில் முன்னர் நிலை கொண்டிருந்த ஸ்ரீ லங்கா இராணுவம் அங்கு புதைத்த கண்ணிவெடிகளை இன்னும் அகற்றவில்லைஎன்பதும்—

இந்திய அதிகாரிகளுக்குச் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றது. (உ)

### சங்கர் தயாள் போட்டியின்றி தெரிவு

புதுடில்லி, ஆக 20

இந்தியஉப ஜனாதிபதியாக இந்திரா காங்கிரஸ் வேட்பாளரான டாக்டர் சங்கர் தயாள் சர்மா போட்டியின்றித் தெரிவு செய்யப்படுவார்.

வேட்பாளர் நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்த ஏனைய 26 பேர்களின் விண்ணப்பங்களை தேர்தல் அதிகாரி நிராகரித்துவிட்டார்.

போதுமான அளவு எம்.பிக்கள் அந்த நியமனப் பத்திரங்களில் கையெழுத்திடவில்லை. கட்டுப்பணம் செலுத்தப்படவில்லை ஆகிய காரணங்களைக் கூறியே தேர்தல் அதிகாரி அவற்றை நிராகரித்தார்,

இதனால் இந்திரா காங்கிரஸ் வேட்பாளர் டாக்டர் சங்கர் தயாள் சர்மா போட்டியின்றி உப ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்ற உத்தியோகபூர்வமான அறிவிப்பு நாளை வெள்ளிக்கிழமை வெளியிடப்படவுள்ளது.

### யாழ்நகரில் ஜலால்தீன்

யாழ்ப்பாணம், ஆக. 20

இஸ்லாமிய நடவடிக்கை முன்னணிப் பிரமுகர்கள் இருவர் யாழ் நகர் வந்துள்ளனர்.

விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்களைச் சந்திப்பதற்கே அவர்கள் இங்கு வந்துள்ளார்கள் எனத் தெரியவருகிறது.

பொத்துவில் முன்னாள் எம்.பி டாக்டர் ஏ.எம். ஜலால்தீன் ஜனாப் எம். ரி. எம். அஷுஹர்த்தீன் ஆகியஇருவருமே அந்தப் பிரமுகர்கள் ஆவர்.

### ஒப்பந்த- - -
(1ம் பக்கத் தொடர்சி)

கொல்லும் அபாயக் கட்டத்துக்கே சென்று விட்டது—

இப்படி லண்டன் டைம்ஸ் நாளிதழ்கருத்து வெளியிட்டிருக்கின்றது. (இ-எ)

### நாடாளுமன்ற---
(1ம்-பக்கத் தொடர்ச்சி)

படிக் கிடைத்தன என்பதைக் கண்டுபிடிக்கவே இந்த விசாரணை நடைபெறுவதாக கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இரகசியப் பொலீஸ் அதிபர் ஏ. எஸ். செனவிரத்தின தலைமையில் புலன் விசாரணைகள் நடத்தப்படுகின்றன.

மேலும் பாதுகாப்புப் படையைச் சேர்ந்த மூவரும் நாடாளுமன்ற ஊழியர்களில் நால்வரும் இரகசியப் பொலீஸாரினால் விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர். (உ-எ)

### கூட்டணி....
(1ம் பக்கத் தொடர்ச்சி)

பிக்கள் அமைச்சர்கள் மீது மேற்கொள்ளப் பட்ட தாக்குதல் இலங்கையில் ஜனநாயகத்தைச் சீர்குலைக்க செய்யப்பட்ட சதி.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியல் குழு மேற்கண்டவாறு கண்டனம் தெரிவித்திருக்கின்றது.

சீர்குலைக்கும் இச்சக்திகளைத் தனிமைப்படுத்தி இந்திய-இலங்கை ஒப்பந்தத்துக்கு ஆதரவளித்து ஒற்றுமைக்கு வலுவூட்ட ஏனைய ஜனநாயக சக்திகள் முன்வர வேண்டும் என்று கூட்டணி அரசியற்குழு நிறைவேற்றிய தீர்மானத்தில் கோரிக்கைவிடப்பட்டுள்ளது. (இ-எ)

### நேபாள மன்னர் சீனுசெல்கிறார்

காத்மாண்டு, ஆக. 19

நேபாள மன்னர் பிரேந்திரா அடுத்த 14 ஆம்திகதி சீனுவுக்கு விஜயம் செய்வார்.

நான்குநாள் விஜயத்தின்போது மன்னருடன் மகாராணி ஐஸ்வரியாவும் செல்வார்.

சீன ஜனாதிபதியின் அழைப்பின் பேரில் மன்னர் பயணம் அமைகின்றது. (இ-எ)

## யாழ். லியோ கழக
### சேவைக்கு உதவுங்கள்!

யாழ். லியோ கழகத்தினர் ஜெய்ப்பூர் கால் நிதிக்காகவும், தமது சேவை நிதிக்காகவும் பணம் சேர்ப்பதற்காக நல்லூர்க் கந்தன் ஆலய வீதியில் ஒரு சேவைநிதி நிலையத்தைத் திறந்துள்ளார்கள்.

இவர்களால் விற்கப்படும் அதிர்ஷ்ட லாபச்சீட்டுகளையும் ரீசேட், திறப்புக் கோர்வை, ஸ்ரிக்கர் போன்ற பொருள்களையும் வாங்கி நீங்களும் இவர்களது சேவைகளுக்கு உதவுங்கள்.

★ சேவைகளிற் சிறந்தது மக்கள் சேவையே ★

### 31 ஆம் நாள் நினைவஞ்சலி



**இ. மகாலிங்கம்**
(ராம்சேது அன் கோ.)

தோற்றம்; 16 - 08 - 1939
மறைவு; 21 - 07 - 1987

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய் பாசத்தின் உறைவிடமாய் எம்மையெல்லாம் வழிநடத்திய அன்புத் தெய்வமே! நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து 31 நாட்கள் சென்றாலும் உங்கள் நினைவு எங்கள் நெஞ்சத்தில் அணையாத சோதியாய் என்றென்றும் ஒளி வீசும்.

**உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.**

58 A, பிரப்பங்குள லேன்,
யாழ்ப்பாணம்.

அன்பு மனைவி
மக்கள்
உற்றார் உறவினர்

(1554)

## நல்லூர் மகோற்சவத்தை முன்னிட்டு உதயன் நடத்தும்
## அதிர்ஷ்டப் பயணப் போட்டி

பெயர் ____________
முகவரி ____________

நல்லூர்க் கந்தன் ஆலயத்தில் மணிக்கோபுரங்கள் எத்தனை?
உதயன் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு எது?
நல்லூரை வழிபட்ட இரு ஈழத்துச் சித்தர்கள் யாவர்?
சஞ்சீவி வார இதழின் இலட்சிய வாசகம் என்ன?

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப் பட்டது. வெளியீட்ட திகதி: 20-08-1987
Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd. 292/2, Navalar Road, Jaffna on Thursday August 20 1987

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org